**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: **23.07.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் புள்ளியியல் ஒருங்கிணைந்த இணையதள விழிப்புணர்வு பணிமனை – 2025

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர், இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் (MoA&FW) கீழ் 2025 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதி, "வேளாண் புள்ளியியல் ஒருங்கிணைந்த இணையதளமான (UPAg) குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கை ஏற்பாடு செய்தது. இந்த கருத்தரங்கில் பேராசிரியர்கள், வேளாண் புள்ளியியல் துறையின் முதுகலை பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் இளங்கலை வேளாண்மை தகவல் தொழில்நுட்பம் மற்றும் உணவு தொழில்நுட்பம் சார்ந்த இயற்கலை பட்டப்படிப்பு மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்த கருத்தரங்கு, தரவினை அடிப்படையாகக் கொண்ட வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சியை வலுப்படுத்த UPAg தளத்தின் மதிப்பை சிறப்பாக வெளிப்படுத்தியது. இந்நிகழ்வில் விருந்தினராக திருமதி. சோனியா ஷர்மா (இயக்குனர்), திருமதி. பரூல் ஜெயின் (இணை இயக்குனர்) மற்றும் திருமதி. மேகா பாண்டே (மூத்த வணிக ஆலோசகர்) ஆகியோர் பங்கேற்று, UPAg இணையதளத்தின் அம்சங்கள் குறித்து நேரடி செயல்விளக்கங்களை வழங்கினர் மற்றும் UPAg தளத்தின் முக்கிய அம்சங்கள் – தரவுக் காட்சிப்படுத்தல், கொள்கை டாஷ்போர்டுகள், மற்றும் முடிவெடுக்கும் கருவிகள் ஆகியவை விளக்கப்பட்டன. முனைவர் அ.ரவிராஜ். மாணவர்களின் பங்கேற்பினை பாராட்டினார், மேலும் ஆராய்ச்சி மற்றும் அவர்களின் பணிகளுக்கு இணையதளத்தை பயன்படுத்த ஊக்குவித்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**